செய்தி வெளியீடு எண்:112 நாள்:05.09.2019

**பத்திரிக்கை செய்தி**

**படைவீரர் / முன்னாள் படைவீரர் மற்றும் அவர் தம் குடும்பத்தினருக்கான 11.09.2019 புதன்கிழமை அன்று நடைபெற இருந்த சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் சுயவேலைவாய்ப்பு கருத்தரங்கு நிர்வாக காரணத்தினால் தற்பொழுது**

**20.09.2019 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட ஆட்சியரின் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சென்னை மாவட்டத்தை சார்ந்த படைவீரர் / முன்னாள் படைவீரர் மற்றும் அவர் தம் குடும்பத்தினர்கள் தங்களது அடையாள அட்டை, அசல் படைவிலகல் சான்று மற்றும் தக்க ஆவணங்களுடன் நேரில் கலந்து கொண்டு தங்களின் குறைகளை தெரிவிக்கலாம்.**

**மேலும், சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை தொடர்ந்து சுயவேலைவாய்ப்பு கருத்தரங்கு நடைபெற உள்ளதால் இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர் பயன் பெறலாம்.**

**மேலும் விவரங்களுக்கு சென்னை மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அவர்களை தொலைபேசி வாயிலாக 044 - 2235 0780 தொடர்பு கொள்ளலாம்.**

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர் . சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-01